செய்தி வெளியீடு எண்.694 நாள்: 8.10.2009

## ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர திட்ட செயல்பாடுகள் குறித்து துணை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆய்வு

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (8.10.2009) தலைமைச் செயலகத்தில், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புதுப்பித்தல் திட்டத்தின் செயலாக்கம் பற்றிய மாநில அளவிலான 9வது ஒப்பளிப்புக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஒப்பளிப்புக் குழுக் கூட்டத்தில், சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.3900.94 கோடி மதிப்பீட்டில் ஒப்பளிக்கப்பட்ட 39 திட்டப்பணிகளையும், அதைப்போல், மதுரை மற்றும் அதனை சுற்றியுள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.838.52 கோடி மதிப்பீட்டில் ஒப்பளிக்கப்பட்ட 8 திட்டங்களையும், மேலும் கோயம்புத்தூர் மற்றும் சுற்றுப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.826.20 கோடி மதிப்பீட்டில் ஒப்பளிக்கப்பட்ட 5 திட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்தார்.

திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் தற்போதைய நிலை குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்ட மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் திட்டப் பணிகளை குறித்த காலத்தில் முடித்து, மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவருமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் நகரங்களுக்கு புதிதாக 1600 பேருந்துகள் வாங்குவது குறித்து ஆலோசனை மேற்கொண்டார். ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின்கீழ் பொதுப்பணித் துறை மற்றும் சென்னை மாநகராட்சி மூலம் சென்னை மாநகர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள சிறிய மற்றும் பெரிய மழை நீர் வடிகால்வாய்கள் மற்றும் ஏரிகளை மேம்படுத்தும் பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு.கு. ஞானதேசிகன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் திரு.நிரஞ்சன் மார்டி, டுபிட்கோ தலைவர் திரு.எம்.ஏ. கௌரிசங்கர், திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை செயலாளர் முனைவர் விஜயகுமார், வீட்டு வசதித்துறைச் செயலாளர் திரு. சுர்ஜித் கே. சவுத்ரி, நெடுஞ்சாலைத்துறைச் செயலாளர் திரு. சந்தானம், நகராட்சி நிர்வாக ஆணையர் டாக்டர் செந்தில்குமார், சென்னை குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. சிவதாஸ் மீனா, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. சுவரன்சிங் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.